# ஸ்டெர்லிங் அண்டு வில்சன் சோலார் பங்கு வெளியிட செபி அனுமதி

ஸ்டெர்லிங் அண்டு வில்சன் சோலார் நிறுவனம் பங்கு வெளியிட பங்குச்சந்தை கட்டுப்பாட்டு அமைப்பான செபி அனுமதி அளித்து இருக்கிறது. பங்கு வெளியிட்டு அந்த நிறுவனம் ரூ.4,500 கோடி திரட்ட திட்டமிட்டுள்ளது.

## சூரியசக்தி மின் உற்பத்தி

ஷாபூர்ஜி பலோன்ஜி குழுமத்தைச் சேர்ந்த ஸ்டெர்லிங் அண்டு வில்சன் சோலார் நிறுவனம் இ.பி.சி. எனப்படும் பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமானத் துறையைச் சேர்ந்தது. இந்நிறுவனம், 5 மெகா வாட்டுக்கு அதிக உற்பத்தி திறன் கொண்ட சூரிய ஒளி மின் தகடுகள் நிறுவுதிறன் அடிப்படையில், கடந்த 2018–ஆம் ஆண்டில் உலகின் நம்பர் 1 நிறுவனமாக உருவெடுத்தது.

இந்நிறுவனம் தனது விரிவாக்க நடவடிக்கைகளுக்குத் தேவையான பகுதி நிதியை திரட்டும் வகையில் புதிய பங்கு வெளியீட்டில் களம் இறங்க முடிவு செய்தது. எனவே அதற்கு அனுமதி கேட்டு பங்குச்சந்தை கட்டுப்பாட்டு அமைப்பான செபிக்கு விண்ணப்பித்து இருந்தது. செபி இப்போது அனுமதி வழங்கி உள்ளது.

இந்த வெளியீட்டில் நிறுவனத் தலைவர் குர்ஷித் யாஸ்தி தருவாலா மற்றும் ஷாபூர்ஜி பலோன்ஜி அண்டு கம்பெனியின் பங்குகள் விற்பனை செய்யப்பட உள்ளது. இதன் மூலம் ரூ.4,500 கோடி திரட்ட இந்நிறுவனம் திட்டமிட்டு இருக்கிறது. இந்த நிதி முழுவதும் பங்குதாரர்களுக்கே செல்கிறது.

ஷாபூர்ஜி பலோன்ஜி அண்டு கம்பெனிக்கு இந்நிறுவனத்தில் 65.77 சதவீத பங்குகள் இருக்கிறது. தருவாலா 33.33 சதவீத பங்குகளை வைத்திருக்கிறார். டாட்டா சன்ஸ் தலைவர் சைரஸ் மிஸ்திரி உள்பட நிறுவனர் குழுவில் இருக்கும் சில தனிநபர்களிடம் மீத பங்குகள் உள்ளன.

## ரூ.4,500 கோடி திரட்ட திட்டம்




## நிர்வகிக்கும் நிறுவனங்கள்

ஐசிஐசிஐ செக்யூரிட்டீஸ், ஆக்சிஸ் கேப்பிட்டல், கிரெடிட் சுயூசி செக்யூரிட்டீஸ் (இந்தியா), டாயிஷ் ஈக்விட்டீஸ் இந்தியா, ஐ.ஐ.எப்.எல். ஹோல்டிங்ஸ், எஸ்.பீ.ஐ. கேப்பிட்டல் மார்க்கெட்ஸ் ஆகிய நிறுவனங்கள் இந்தப் பங்கு வெளியீட்டின் சர்வதேச ஒருங்கிணைப்பாளர்களாக உள்ளன. இண்டஸ் இந்த் வங்கியும், யெஸ் செக்யூரிட்டீஸ் இந்தியாவும் வெளியீட்டை நிர்வகின்றன. வெளியீட்டுக்கு பின் இந்நிறுவனத்தின் புதிய பங்குகள் மும்பை மற்றும் தேசிய பங்குச்சந்தைகளில் பட்டியலிடப்பட உள்ளன.